RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s33

# ஐ.பி. எஸ் திலகவதியின் படைப்புகளில் சமுதாயப் பார்வை

**செ. ரெஜினா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம்-625601, தமிழ்நாடு, இந்தியா

# Social Perspective in the Works of Thilakavathi, IPS

**S. Regina** [a, *]

[a] Department of Tamil, Jayaraj Annapackiam College for Women (Autonomous), Periyakulam-625601, Tamil Nadu, India

* Corresponding Author: reginatam@annejac.ac.in

Received: 03-04-2021
Revised: 30-03-2022
Accepted: 11-04-2022
Published: 27-05-2022

**ABSTRACT**

There are many writers in literature who reflect on society. These contemporary literary creations talk about society and the glitches that have arisen in society. But they point out only the shortcomings in the society except few who offer solutions to solve them. In that perspective, Thilakavathi has been expressing various thoughts connected to society in her works. She has been involved in writing poetry in Tamil literature and started writing short stories. The purpose of this research paper is to illustrate how Thilakavathi having worked in the police force and happened to witness misfortunes that are happening in the society volunteered to write, create works so as to reform the society, listen to the grievances of the people to protect them, and live up to the ethical responsibilities.

**Keywords:** Thilakavathi, Contemporary Literary, Tamil Literature, Short Stories

## முன்னுரை

இன்றைய படைப்பிலக்கியங்கள் சமுதாயத்தைப் பற்றியும், சமுதாயத்தில் தோன்றியுள்ள சிக்கல்கள் பற்றியும் பேசுவதாக அமைந்துள்ளன. அந்த வகையில் திலகவதி சமுதாயம் சார்ந்த பல்வேறு கருத்துக்களைத் தமது படைப்புகளில் வெளிப்படுத்தி வருகின்றார். தமிழிலக்கியத்தில் கவிதை எழுதுவதிலேயே ஈடுபாடு கொண்ட இவர் சிறுகதை எழுதத் தொடங்கினார். வாழ்வில் ஏற்பட்ட காயம் எழுத்திற்கு வலுசேர்த்தன. நான் வியூகமிடப்பட்டு அபிமன்யூவைப் போலத் தாக்கப்பட்டிருக்கிறேன். அது தாக்குதல் அன்று, ஈவு இரக்கமற்ற குரூரம். மானுடத்திற்கே ஒவ்வாத கொடுமை, இந்தக் குரூரங்களும் கொடுமைகளும் என்னை அடித்து வீழ்த்தவோ அபலையாக ஓலமிட வைக்கவோ இயலாது போயின. இராவணன் இருக்கைக்கு நிகராக இலங்காபுரியில் அனுமன் வால், அன்று வலிமையால் வளர்ந்து உயர்ந்தது போல வளர்ந்தேன். இந்த வேளையில்தான் பெருநெருப்பாகப் பரவிற்று. இதனையே "இந்தச் சமயத்திலேதான் எனக்கு எழுத வேண்டும் என்ற மூர்க்கம் ஏற்பட்டது என்பதைவிட வேறு வார்த்தைகளால் குறிப்பிட முடியாது. என்னை நெருங்கிய பிரச்சினைகளின் இருளில் நான் தடுமாறாமல் ஒளிகாட்டும் வெளிச்சமாக ரணகாயமுற்ற இதயத்தின் வேதனைக்கு மாற்று மருந்தாக வந்த எழுத்து வடிவில் என் மனம் வடிகால் கண்டது, நான் எழுதத் தொடங்கிய பின்னணி தான்" என்று திலகவதி கூறுவதிலிருந்து அறியலாம் (Thilagavathi, 1994). இந்தச் சமூகத்திடமிருந்து கற்றதை, சமூகத்திற்கே திருப்பி அளிப்பதல்லாமல் இலக்கியத்தின் பயன்வேறு எது? என்பதை கார்க்கி மிக

அழகாகச் சொன்னார். "எழுத்தாளன் மனித ஆன்மாவைச் செப்பனிடுகிற பொறியாளர். என் எழுத்து யாரேனும் சிலருக்குப் பாதையில் வெளிச்சமாக, பயணத்தின் துணையாக இருக்குமெனில் எனக்கு அதைக் காட்டிலும் பெரிய மகிழ்ச்சி வேறு என்ன இருக்க முடியும்" என்று இவரின் எழுத்து உந்துதல் வெளிப்பட்டதை இக்கட்டுரை ஆராய்கிறது (Thilagavathi, 1994).

## தனித்தன்மை

திலகவதியின் கதைகளில் முதலில் காணப்படுவது எந்தக் கொடுமையானக் கருத்தையும் அஞ்சாமல் சாடும் துணிவும், சமூகச் சீர் கேடுகளை - அநீதிகளை அவர் தெளிவாக எடுத்துரைக்கும் நேர்த்தியும், பெண் உரிமையை மானுடத்தில் பாதிப்போருக்கான விடுதலையைத் தேடுதலாகவே பிரகடனம் செய்கிறார். விரிந்து பரந்த சிந்தனையில், தன் அனுபவத்தின் துணைகொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்கிறார். பெண்ணின் அடிமை நிலை, அதனைப் போக்கத் தேவையான வழிமுறை, ஒரு பெண் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைப் பிரச்சினைகள் நேரிடும் போது அவற்றைத் துணிவுடன் எதிர்த்து நின்று குழப்பம் இல்லாமல், எடுக்க வேண்டிய திடமான சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட கதைக் கருவைத் தேர்ந்தெடுத்துப் பாத்திரங்களை உருவாக்கி, புதினங்களைப் படைப்பது திலகவதியின் தனித்தன்மை என்று கூறலாம். இவ்வகையில் நோக்கும்போது தமிழ்நாட்டிலேயே இவர் பெண் குலத்தின் ஈடு இணையற்ற இமயமாகத் திகழ்கிறார் எனில் மிகையன்று. இவரைப் பற்றி ஆராயும்போது இவரது தனித்தன்மையை இலக்கியக் கலைஞர், மொழி ஆக்கத்துக்கு ஊக்கம் தந்தவர், சமுதாயச் சிந்தனையாளர், பெண்ணுரிமைக்குக் குரல் கொடுப்பவர், ஆய்வாளர் என்ற நிலைகளில் இவரது தனித்தன்மைகளைப் பகுத்துக் காணலாம்.

"மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல

மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என்பார் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை (Desigavinayagam Pillai, 1956). நயத்தகு நாகரீகமிக்கத் தமிழ் நூல்களை எழுதித் தமிழன்னையை அணி செய்த திலகவதி ஐ.பி. எஸ். அவர்களைப் பெற்றதில் தமிழகம் பெருமை பெற்றுள்ளது எனலாம். தத்துவ ஞானிகளை விடவும் செல்வாக்கு மிக்கவராய், மனித உள்ளங்களை அளந்து காட்டும் திறன் உடையவராய்த் தமது இலக்கியப் படைப்புகள் மூலம் தமிழுலகிற்கு அறிமுகமானவர் என்பதில் வியப்பொன்றும் இல்லை.

## சமுதாயச் சிந்தனையாளர்

சமுதாயக் குறைகளைச் சுட்டிக்காட்டுவதோடு அல்லாமல், அவை தீர்வதற்கான வழிகளையும், பெண்கள் தாழ்ந்தவர்கள் அல்ல என்பது தமிழ்க் கோட்பாடு. பெண்களைவிடப் பெருமையும் தகுதியும் வாய்ந்தது எதுவும் இல்லை என்பது வள்ளுவர் கருத்து. இதனை,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்

திண்மை உண்டாகப் பெறின்:

என்ற அடிகள் மூலம் வெளிப்படுத்துகிறார் (Munisamy, 1992). இலக்கியம் என்பது வாழ்க்கையின் பிரதிபலிப்பு. இலக்கியம் வாழ்க்கையினின்று பிரித்தறிய இயலாதது என்பது திலகவதியின் இலக்கியக் கோட்பாடாகும். பாரதிதாசனை இவருக்கு மிகவும் பிடிக்கும். அதற்குக் காரணம் அவர் பெண்ணடிமை தீரக் குரல் கொடுத்தவர் என்பதுதான். பாரதியின் தடத்திலே வந்த பாரதிதாசன்,

"அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்

அழகிய தமிழ்நாட்டின் கண்கள்"

என்று தமிழர் மனதினைத் திருத்த முயன்றவர் (Bharathidasan, 1994). பெண்ணிற்கு ஆண் நிகர் என்று பெண்ணை முதன்மைப்படுத்திப் புத்தம் புதிய ஆத்திசூடி சொன்னவர்.

“பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டில்

மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே”

என்று உறுதியாக நம்பியவர் (Bharathidasan, 1994). பெண்ணுரிமை, பெண்கல்வி, கைம்பெண் திருமணம் ஆகியவை குறித்து நெருப்புக் கவிதைகள் யாத்தவர் என்று பாரதிதாசனின் கவிதை வாயிலாக அறியமுடிகிறது. திலகவதியின் படைப்புகளில் பெரும்பாலானவை பெண் உரிமைக்காக விடுதலைக் குரல் கொடுத்திருப்பது அறியத்தக்கது. இவரது எழுத்துக்கள் வாயிலாகச் சமுதாயத்தைச் சீர்திருத்தி; பெண்களை முன்னேற்ற முயலும் எழுத்தாளர்களுள் திலகவதியும் ஒருவராவார் இவரது சிறுகதைகள் ஆணாதிக்கத்தின் சமுதாயச் சூழலையும் பெண் உரிமைகளையும் அவற்றால் ஏற்படும் முரண்பாடுகளையும் சுட்டும் நிலையில், சிந்தனையால் மேம்பட்டு நடைமுறை வாழ்க்கையில் பாதிக்கப்பட்டுத் தவிக்கும் பெண்களின் நிலைக்காகக் குரல் கொடுக்கின்றன. சமூகம் நலம்பெற வேண்டி, ஒவ்வொரு காலத்து இலக்கியங்களும் சிந்தனைகளை வெளிப்படுத்தி வந்துள்ளன. சங்க இலக்கியமான புறநானூறு, “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று கணியன் பூங்குன்றனார் உணர்த்தியது ஒரு பெருமை மிக்க சமூகச் சிந்தனையாகும். “வரலாற்றுப் போக்கில் சமுதாய மாற்றங்கள் நிகழும்போது, சிந்தனை மாற்றங்கள் ஏற்படுகின்றன” என்றும் “வரலாற்றிலும் சமூகம், சுதந்திரக்கனல் வீசிய காலத்திலும்கூடச் சமூக உணர்வூட்டும் நாடகங்களை நடத்திய செய்தியை எம்.ஜி. இராமச்சந்திரன் கூறுகிறார்” நாடகங்களைப் போலவே சிறுகதை, புதினம், புதுக்கவிதை போன்ற புத்திலக்கியங்களும் சமூகச் சிந்தனைகளை விதைப்பதில் முனைந்து நிற்கின்றன. இக்காலச் சிறுகதை ஆசிரியர்கள் பொழுதுபோக்கிற்காக மட்டும் படைப்பதில்லை. ஆசிரியர் தாம் வாழும் காலச் சமுதாயத்தைப் பற்றிய ஆழ்ந்த உணர்வும், அதன் பலவீனமான அல்லது வன்மை செறிந்த கூறுகளில் ஆழ்ந்த அறிவும் கொண்டு படைப்பதன் வாயிலாக சமுதாய உணர்வு கொண்டவராக, சமூகச் சிந்தனையாளராக விளங்குபவராவார். கலைஞன் தான் காணும் நிகழ்வுகளை நுணுகி ஆராய்ந்து ஒரு கதையைப் பின்னுகின்றான். அக்கதைப் பின்னலின் மூலம் சமுதாயச் சிந்தனைகளை மக்களிடையே பரப்ப முயலுகின்றான். “தாம் படைக்கும் படைப்பு மக்களை உயர்த்தி நல்வழிப்படுத்தவும், மக்கள் வாழ்க்கைக்கு உதவ வேண்டும் என்று எண்ணிப் படைக்கப்படும் கலைஞர்களிடம் ஆழமான சமுதாயக் கண்ணோட்டத்தைக் காணலாம்” என்று கூறும் வேங்கடேசனின் கருத்தைத் திலகவதியின் சமூகச் சிந்தனையோடு ஒப்பு நோக்கலாம் (Venkataraman, 1997). படைப்பாளன் தான் பெறும் அனுபவங்களைக் கொண்டு சமுதாயத்தைக் கணிக்கும் திறமை பெறுகின்றான்.

## கணவனின் பொறுப்பின்மை

குடும்பத்தில் முக்கியப் பொறுப்பு வகிப்பவர் கணவன். அவன் தன் குடும்பத்தாருக்குத் தேவையான வருவாயை ஈட்டும் முயற்சியில் ஈடுபடாமல் வாழ்க்கையில் பொறுப்பின்றித் திரிகின்றபோது பொருளாதாரப் பற்றாக் குறையால் அவதிப்படும் நிலையினை ஆசிரியர் ‘சொர்ணலட்சுமியின் தவறுகள்’ என்னும் கதையில், சொர்ணலட்சுமியின் கணவனுக்கு அண்ணன் அருணகிரி ஒரு பெட்டிக் கடை வைத்துக் கொடுக்கின்றான். ஆனால், செல்லப்பா அந்தக் கடையைச் சரியாக நடத்தாமல் எப்பொழுதும் கடையை அடைத்தும் குடிப்பதுமாக இருந்து கடையின் ஓட்டம் நின்றுவிடுகிறது. இதற்குக் காரணம் பொறுப்பற்ற தன்மையே, “இந்த ஊர் சனங்களுக்கு நாணயம் பத்தாது. நம்பிக் கடன் குடுத்தா திரும்பித் தாரதே இல்லே. திருப்பிக் கேட்டா கடைப் பக்கம் வர்ரதே இல்லே.” என்று ஊர் மக்களின் மீது புகார் கூறுகின்றான் செல்லப்பா. இப்படி அவனுக்கு வைத்துக் கொடுக்கும் ஒவ்வொரு வியாபாரத்தையும் சரிவரச் செய்யாமல் இருப்பதனால், அவனுடைய குடும்பம் வறுமையில் வாடும் நிலையை அடைகின்றது. இவனின் பொறுப்பின்மையால் சீராக வாழுந்த குடும்பம் சிறப்பிழந்து நிற்பதனை ஆசிரியர் கூறுகின்றார் (Thilagavathi, 1994).

## வறட்டுக் கௌரவம்

வறட்டுக் கௌரவத்துடனும், பிடிவாதக் குணத்துடனும் ஒருவன் வாழ்கின்றான் என்றால் அவன் இச்சமுதாயத்தில் வாழலாம், தலை நிமிர்ந்து வாழ முடியாது என்பதனைத் திலகவதி 'நிறம் மாறும் உணர்வுகள்' என்ற கதையில் அழகாக எடுத்துரைக்கின்றார். செட்டியார் ஒரு முறை இராமசாமியிடம் கடனாகப் பணம் கொடுத்திருந்தார். அந்தப் பணத்தைத் திருப்பித் தரவே இல்லை. இதனால் செட்டியார் பணம் கேட்டு இராமசாமியின் வீட்டிற்கு வந்திருந்தார். செட்டியார் தன் வீட்டிற்கு வருவதற்குமுன் இராமசாமி தென்னாப்பிரிக்காவில் ஒரு மளிகைக் கடையில் வேலை பார்த்தாராம், மளிகைக் கடைக்காரனின் மகளைக் காதலித்த போது நேர்ந்த அவமானங்களையும், அவளுடைய தந்தையின் கோபத்தினால் பயந்து கப்பல் ஏறியதையும், நவரசம் சொட்டச் சொட்ட சொல்கின்றார். இவரின் பேச்சோ கேட்கின்றவர்களை, பசை போட்டு நிறுத்துகின்ற பேச்சாக அமைகின்றது.

இந்நிலையில்தான் செட்டியாரைப் பார்க்கின்றார் இராமசாமி. அவரின் மனமும் முகமும் அமைதியைத் தழுவியது. அப்போது வந்த பாலு ஒன்றும் புரியாமல் ஏன் இத்தகைய அமைதியுடன் உட்கார்ந்திருக்கின்றார் இராமசாமி என்று அவரின் மனைவியிடம் கேட்டபோது அவள், செட்டியாருக்குப் பணம் கொடுக்கனுமாம் அதைக் கேட்டு வந்திருக்கின்றார் என்றாள். "செட்டியாருக்கு எவ்வளவு பாக்கி" என்றான் பாலு. மேலும், "அப்படி ஒண்ணும் பெரிய தொகையா இல்லியே. இதுக்குப் போயா இத்தனை குழப்பம்?" என்று கூறி பாலு அதற்குரிய பணத்தைக் கொடுத்தான். இவ்வளவு நேரம் அமைதியைத் தழுவிய இராமசாமி உரத்த குரலில் செட்டியாரைப் பார்த்து, "என்ன செட்டியார்வாள்" என்றும், "பேசாம உட்கார்ந்து கிட்டே இருந்தா என்ன அர்த்தம்? பாக்கியைச் சொல்லி பைசல் பண்ணிக்கறது இந்தாரும் உம்ம பணம் பிடியும்" என்றான் இராமசாமி. வீட்டிற்குள்ளே பார்த்து உரக்கக் குரல் கொடுத்தார். மீண்டும் அவனுடைய குரல் ஓங்கியது. அவனுடைய வறட்டுக் கௌரவம் தலைதூக்கியது என்று ஆசிரியர் இக்கதையில் புலப்படுத்துகின்றார் (Thilagavathi, 1994).

## பெண் ஓரங்கட்டல்

சமுதாயத்தில் ஒரு பெண் திருமணமாகி சில ஆண்டுகள் குழந்தை இல்லையெனில் அப்பெண்ணைப் புகுந்த வீட்டார் துன்புறுத்துவதையும், சமூகத்தில் அவள் மதிப்பிடும் பாங்கினையும் ஆசிரியர் கூறுகின்றார். ஒரு பெண் தாய்மை அடையவில்லையென்றால், இச்சமுதாயம் அப்பெண்ணிற்குக் கொடுக்கப்படும் பட்டம் மலடி. ஆனால் கணவனை எவரும் குறை கூறுவதில்லை. இதனைக் கூறியே அப்பெண்ணை அடிமைப்படுத்துகிறார்கள் என்பதை, "பெண்களின் இனப்பெருக்கத் திறமையே அவர்களைச் சமுதாயம் அடிமைப்படுத்துவதற்குரிய அடிப்படைக் காரணமாகும்" என்று ஆசிரியர் சாரதாம்பாள் கூறுகின்றார் (Saradhambal, 1966). குழந்தையின்மையால் பெண்கள் படும் அவல நிலையைத் திலகவதி 'வீட்டிற்குள் ஒரு மிருகம்' - என்ற கதையில் குறிப்பிடுகின்றார். குருவிற்கும் துர்க்காவிற்கும் திருமணமாகி நீண்ட நாட்கள் ஆகியும் குழந்தை இல்லை. இதனால் பூபதி என்ற அனாதைப் பையனை எடுத்து வளர்க்கிறார்கள். சிறு குழந்தையாக இருந்த பூபதி திருமண வயதாகியபோது தன் முறைப்பெண்ணைக் காதலிக்கிறான். ஆனால் அவள் அவனை விரும்பவில்லை. இந்நிலையில் அவளை வலுக்கட்டாயமாகத் தன் வீட்டிற்குத் தூக்கி வருகிறான். இதனைப் பார்த்த துர்க்கா அவளை வீட்டிற்கு அனுப்பி வைக்கிறாள். இதனால் ஆத்திரம் அடைந்த பூபதி, "யாரைக் கேட்டுச் செஞ்சீங்க?" என்றான். மேலும், "யாரைக் கேட்கணும் உன்னை பதினாறு வருசமாக என் சொந்தப் பிள்ளை போல வளர்த்து ஆளாக்கினவடா நான்" என்றாள். "கிழிச்ச! செஞ்சதுக்கெல்லாம் சேத்துத்தான் இன்னிக்கு மானத்தை வாங்கிட்டியே! இனிமே ஆம்பிளைன்னு ஊருக்குள் நான் எப்படிக் காலை வைப்பேன்? கெடுத்திட்டியே காரியத்தை? நம்பினவனை பாழ்பண்ணிட்டியே இந்தப் புத்திக்குத்தான் புள்ளை தங்கலை" என்றான் பூபதி. தன்னை வளர்த்தத் தாய் என்று கூடப் பாராமல் அவளுக்குக் குழந்தை இல்லை என்று கூறும் இழிவான நிலையையும் தன்னை வளர்த்த நன்றி மறக்கும் பண்பினையும் இக்கதையின் மூலம் சுட்டிக்காட்டுகின்றார் (Thilagavathi, 1994).

## மறுமணம்

திருமணமான பெண், கொடுமை செய்கின்ற கணவனை விட்டுப் பிரிந்து சென்று விவாகரத்து வாங்கித் தனித்துத்தான் வாழ வேண்டும் என்ற நிலை இல்லை. குறிப்பாக ஆண்களின் தேவையை நிறைவு செய்யும் கருவியே பெண் என்பது போல நடந்து கொள்கின்றது இச்சமூகம். "பெண் இங்கு ஆணைச் சார்ந்த உடைமையாகவே இன்னும் கருத்தளவிலும் இருக்கிறாள். ஒருவனுக்கு அவள் தாயாக, காதலியாக, சகோதரியாக இருக்கின்ற நிலைதான் சித்திரிக்கப்பட்டுள்ளது அன்றி இந்த உறவுகளை விட்டுச் சிறகடிக்கின்ற மனுஷி என்ற நிலையில் உரிய அங்கீகாரத்தோடு வார்க்கப்பட்டுள்ளாள் என்றால் பெரும்பாலும் இல்லை" என்று பிரபஞ்சன் கூறியுள்ளார். இத்தகைய பெண் குடும்பத்தில் யாரையேனும் சார்ந்து வாழ்கின்றாள் (Thilagavathi, 1994). பால் உணர்வு என்பது இருபாலர்க்கும் இயற்கை. விதவைகளுக்கும், கணவனைப் பிரிந்து வாழ்பவர்களுக்கும் கூட அவ்வுணர்வு ஏற்படுவது இயற்கை என்ற அடிப்படையில் அவர்களுக்கு மறுமணத்தைப் படைப்பாளர் பரிந்துரைக்கின்றார். படைப்பாளர் கூறுவது போன்று மறுமணம் செய்து கொண்டு வாழலாம் என்று சட்டம் இருக்கின்றது. இதனையே, 'அவசரம்' - என்ற கதையில் தனம் என்ற பெண்ணுக்கு 13 வயதிலேயே திருமணம் நடந்தது. அவளின் கணவன் ஒரு நோயாளி இது தெரியாமலேயே தனத்தின் தந்தை மணமுடித்துக் கொடுக்கின்றார். அவரின் நோய் வெளியே தெரிந்தவுடன் தன் மகளை அழைத்து வந்துவிட்டார். அப்போது அறியாத வயதில் தனம் கர்ப்பமாக இருந்தாள். இந்நிலையில் அவளின் கணவன் இறந்துவிட்டான். அன்றிலிருந்து இன்றுவரை அவள் தந்தையின் வீட்டில்தான் இருக்கின்றாள் என்று தன் அக்கா கூறியதைக் கேட்ட பழனி அவளுக்கு மறுவாழ்வு கொடுக்க எண்ணுகின்றான். தனத்திடம் வெகுவாகப் பேச ஆரம்பித்தான். தன் விருப்பத்தைக் கூறினான் பழனி. ஆனால் தனம் இதற்கு ஒன்றும் கூறவில்லை. இந்நிலையில்தான் இருவரும் தனிமையில் இருக்கும் நிலை வந்தது. பழனியின் அக்கா கோவிலுக்குச் சென்றாள். அப்போது, "இந்தா தனம்! தண்ணி நின்னுடப் போவுது ரெண்டு கொடம் புடிச்சி தொட்டியில ஊத்திடு. என் தம்பி எழுந்ததும் அவனுக்கு ஒரு வாய் காப்பிப் போட்டுக் குடுத்துடு" என்றாள் ருக்மணி. தனம் தண்ணீர் எடுத்து ஊற்றிவிட்டுப் பழனிக்குக் காப்பி கொடுக்க வரும்போது பழனியின் மனதில் ஆயிரம் எண்ணங்கள். தனத்தின் நினைவுகள் பட்டாம்பூச்சியாய்ப் பறந்தன. "பழனி அவள் நெற்றியிலும், கன்னத்திலும், கண்களிலும், காதுகளிலும், கழுத்திலும் அவனது ஆவேசத் தகிப்பு முத்தங்களாய் சிந்தின" எனத் தனம் மௌன மொழிகளில் பழனியிடம் சம்மதம் தெரிவித்தாள் என்று ஆசிரியர் அழகாகக் கதையில் மறுமணம் பற்றிச் சுட்டியுள்ளார். விதவை அனுபவிக்கும் கொடுமையை எதிர்த்துப் போராடியவர்கள் எனப் பெரியார், ஈ.வே.ரா., ராஜாராம் மோகன்ராய், பாரதி ஆகியோரைக் குறிப்பிடலாம். "விதவை நிலைக் கொடுமை விவரிக்க வொண்ணாத அளவுக்குச் சித்திரிக்கப்படுகிறது. ஆனால் இந்த நிலைக்கான அடிப்படைக் கூறுகள் யாவை? என்ற வினா எங்குமே எழுப்பப்படவில்லை. ஓர் இழப்பு உயிரிழப்பாக, உறவு இழப்பாக, பொருளாதார இழப்பாகப் பார்க்கப்படுவது நியாயம். இங்குச் சமூக மதிப்பு இழப்பாகவும், வாழ்க்கை இழப்பாகவும் கணிக்கப்படுவது கொடுமை ஆகும்" என்று சங்கரவள்ளி நாயகம் தன் நாட்டுப்புறவியல் என்ற நூலில் கூறுகின்றார் (Sankaravalli Nayakam, 1996). மனைவி இறந்த மறுவாரமே மறுமணம் முடிக்கும் கணவன்மாருக்கு இச்சமுதாயக் கட்டுப்பாடு கிடையாது. சட்டையை மாற்றிக் கொள்வது போல ஒருத்தி இறந்தால் இன்னொருத்தி என்ற சலுகை ஆணுக்கு. இதனைப் புரட்சிக் கவி பாரதிதாசன்,

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்

மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?

பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்

பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?"

என்று மறுமணம் வேண்டாம் என்பவரைக் கேலி செய்து கண்டனம் செய்கின்றார்.

விதவை நிலையில் உள்ள பெண்கள் படும் துயரினைத் திலகவதி 'காயிலே இனிப்பதென்ன' என்ற கதையில் வெளிப்படுத்துகிறார். முத்துராமலிங்கத்தின் தாய் விதவை என்றதனால் தன் மகன்

வெளியில் புறப்படுவதைப் பார்த்து, "எங்கே புறப்பட்டுட்டே" என்று கேட்பது சகுனத் தடையாகிவிடுமோ என்று தயங்கித் தடுமாறி, கேட்காமலே இருந்துவிடவும் முடியாத மனநிலையில், "சட்டுன்னு வந்துருவீல்ல" என்று கலக்கத்துடன் எதையோ கேட்டு வைத்தாள். அவளுடைய தவிப்பு அவனுக்குப் புரிந்தது (Bharathidasan, 1994). ஆனால் அம்மா அவன் தெரு திரும்பும் வரை வெளிவாசலுக்கு வரமாட்டாள். அவளும் விதவைதானே? ஆகவே அப்படி வந்து பயணம் போகிறவனின் எதிரில் நிற்பது சகுனத் தடையாம், "அம்மா அம்மாதான் விதவையாவது சகுனத்தடையாவது" என்று அவள் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டாள் என்று அவன் தன் தாயைப் பற்றி நினைக்கின்றான் (Thilagavathi, 1994). இது பெண்ணே தனக்கு இட்டுக் கொள்ளும் வேலி எனில் மிகையன்று. பெற்ற தாய் விதவையாக இருந்தாலும் கூட சகுனம் பார்க்கும் நிலை இருக்கின்றது. அதிலும் மகன் நல்ல காரியத்திற்காக வெளியில் செல்லும்போது, அவனை முன்னின்று வழியனுப்ப இயலாது மறைந்து நின்று வழியனுப்பும் நிலையை ஆசிரியர் விதவைத் தாயின் வழியாகக் கூறுகின்றார்.

## முடிவுரை

தனிமனிதன் வாழ்வில் முன்னேற முயற்சி எடுக்க வேண்டும். அம்முயற்சியில் அவன் சேர்ந்து, உறவுமுறைகளுடன் வாழவேண்டும். குடும்பம் சிறக்க அக்குடும்பத்தில் இருக்கும் கணவன் மனைவி உறவு நிலையே முக்கியமானது. ஆனால் அவர்களின் மனவேறுபாட்டினால் குடும்பம் பிரிகின்ற நிலையையும், அதனால் அக்குடும்பம் வறுமையை நாடுகின்ற நிலையையும் கூறிய படைப்பாளர் அதைச் சரிசெய்வதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுவதையும் சமூகத்திற்கு அறிய செய்கிறார் என்பதை படைப்பின் வாயிலாக அறிய முடிகிறது.

## References


Bharathidasan, (1994) Bharathidasan Kavithaigal, Manivasakar Pathippagam, Chennai, India.

Desigavinayagam Pillai, C., (1956) Malarum Malaiyum, Pari Station, Chennai, India.

Munisamy, V., (1992) Thirukkural Thelivurai, Thirukkuralar Pathippagam, Chennai, India.

Sankaravalli Nayakam, A., (1996) Natupurath Tamil, Akaram Pathippagam, Kumbakonam, India.

Saradhambal, S., (1966) Penmai Nokkil Thaimai, Tamilputhakalayam, Chennai, India.

Thilagavathi, G., (1994) Ennai Kavarntha Nool, Narmadha Pathipagam, Chennai, India.

Venkataraman, Su., (1997) Akilan Short Stories – A Review, Tamilputhakalayam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License